DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 599/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W. P.W.6 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கோபால் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.03.2026.

**முதல் விசாரணை**

நான் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.11.2025 ம் தேதி தலைமை காவலர் மணிமேகலை நிலைய அலுவலில் இருந்த போது செல்வக்குமார் த/பெ. காளியப்பக்கவுண்டர் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 729/2025 ச/பி .303(2) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கையினை பதிவு செய்து புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். நான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே மாலை 17.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்லதுரை மற்றும் ஜனார்த்தனன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும் பார்வை மகசர் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன் . **மாதிரி வரைபடம் அசா.ஆ .7 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் செல்வகுமார், நவீன் பாபு, ஜனார்த்தனன், ஆகியோரே விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்த நிலையில் வழக்கின் எதிரியை தணிக்கை செய்தும் எதிரி பழம் குற்றவாளி என்ற நிலையிலும் கடந்த 22 11 2025–ஆம் தேதி

அன்று உடுமலைப்பேட்டை டு பழனி ரோடு குண ஸ்ரீ லாட்ஜ் அருகில் வாகன தணிக்கையில் இருந்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் எங்களை பார்த்ததும் தப்பியோட முயற்சித்து வரை உடனிருந்த போலீஸ் பார்ட்டியுடன் பார்த்தவுடன் சுற்றி வளைத்து பிடித்து விசாரித்த போது அவர் தனது பெயர் சிவக்குமார் என்றும் தகப்பனார் பெயர் கண்ணன் பெரியகோட்டை பிரிவு என்றும் கூறியவர் பின்னர் ஜெனியும் ஆட்டோ கேர் கடையில் இருந்த வாகனத்தை திருடியதாக ஒப்புக்கொண்டு கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சிவக்குமார் அன்பரசன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்து அவர் திருடி ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தை ஆஜர் படுத்தியதை படிவம் 91 யிலும் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று தாக்கு மூலம் பதிவு செய்தேன்.

**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அசா.ஆ.8 என குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் எதிரியை திரேக பரிசோதனைக்கு பின் எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் வழக்கு சொத்தை படிவம் 91 மூலமாக அனுப்பி வைத்தேன். வாதி செல்வகுமார் என்பவரை விசாரித்து மறு வாக்கு மூலம் பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் மணிமேகலை என்பவரை விசாரித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகார் 6 நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையம் எவ்வளவு துாரத்தில் உள்ளது என்றால் சுமார் 1 ½ கிலோ மீட்டர் இருக்கும். காலதாமதம் குறித்து காரணம் கேட்டு தெரிந்து கொண்டிர்களா என்றால் தேடி பார்த்ததாக சொன்னார். எங்கு சென்று தேடிப்பார்த்ததாக வழக்கு கோப்பில் சொல்லவில்லை என்றால் அவர் தேடி பார்த்ததாக சொன்னார், எங்கு என்று சொல்லவில்லை. வாதி தான் கடையின் உரிமையாளர் என்பதை நிருபிக்க ஆவணம் கொடுத்தாரா அல்லது வழக்கு கோப்பில் சொல்லியுள்ளிர்களா என்றால் இல்லை.
2. வழக்கில் சொல்லியுள்ள வண்டி வாதியின் பெயரில் உள்ளதா என்று விசாரித்து தெரிந்து கொண்டிர்களா என்றால் ஆர்சி புக்கில் அவர் பெயரில் இல்லை, சசிகுமார் பெயரில் உள்ளது. கன்சல்டிங் வேலை செய்து வருவதால் பழைய ஓனர் பெயரில் உள்ளது. இதுவரையில் பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் ஆமாம். ஆர்டிஓ சட்டப்படி வண்டி அவர்கள் பெயரில் இருக்க வேண்டும் என்றால் சொந்த பயன்பாட்டிற்காக வாங்கும் போது அப்படி செய்ய வேண்டும் இங்கு

கன்சல்டிங் விற்பனை செய்வதால் என்பதால் பார்ம் 32 ஆகியவற்றை மட்டும் பெற்றுள்ளார். வாதியின் பார்ம் 29, 30 மற்றும் 32 ஆகியவற்றை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. சம்பவ இடத்தில் கேமரா இருந்ததாக தெரிந்து கொண்டிர்களா என்றால் கடையின் முன்பு கேமரா இருந்தது. அந்த சிசிடிவி பதிவுகளை வழக்கில் தாக்கல் செய்துள்ளிர்களா என்றால் வாதிக்கு எதிரியை அடையாளம் தெரியும் என்பதால் பதிவுகளை பார்க்கவில்லை. உங்களுடை ய புகாரிலும் வாக்குமூலத்திலும் எதிரியின் அடையாளம் பற்றி வாதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் டிரஸ்கோடு மட்டும் சொன்னார். அங்க அடையாளத்தை பற்றி சொல்லவில்லை என்றால் ஆமாம். உண்மையில் சம்பவ நடந்திருந்தால் வாதியின் கடையில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை வழக்கு கோப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், சிசிடிவி கேமரா பதிவு கடையின் முன்பு தான் இருந்தது.
4. ஆர்சி புக் ஓனர் சசிகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றிர்களா என்றால் இல்லை. அவரை வழக்கு கோப்பில் சாட்சியாக சேர்த்துள்ளிர்களா என்றால் இல்லை. பார்வை மகசரில் 2 வது பாராவில் 8 வது லைனில் ஏதோ எழுதி அதன் மேல் பெலிக்கான் வைத்து அதன் மேல் MIER என்று சொல் ஓவர் ரைட்டாக உள்ளது என்றால் எழுத்து பிழையாக உள்ளதால் திருத்தப்பட்டுள்ளது. பார்வை மகசரில் 2 வது பாராவில் 10 வது லைனில் என திருத்தப்பட்டு சுமார் 65 அடி துாரத்தில் என்றுள்ளது என்றால் சரிதான். வரைபடத்தில் சம்பவ இடத்திலிருந்து சுமார் 65 அடியில் சென்டர் மீடியசன் டவர் லைட் உள்ளது என்றுள்ள நிலையில் பார்வை மகசரில் சுமார் 50 அடி என்றுள்ளது என்றால் சரிதான்.
5. அசா.2 நவின் பாபுவின் மற்றும் அசா.3 ஜனார்த்தனன் மற்றும் அனைத்து சாட்சியங்களின் 180(3) வாக்குமூலத்தில் 10 வது லைனில் வாதியின் பெயரும் மற்றும் 15 வது லைனில் எதிரியின் பெயரும் சிவக்குமார் என்றுள்ளது என்றால் தட்டச்சு செய்யும் போது பிழையாக இருக்கும். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் எந்த கடையில் வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்று வழக்கு கோப்பில் சொல்லவில்லை என்றால் காவல் நிலையத்தில் வைத்து எடுக்கப்பட்டது. பொதுவாக பழனி ரோடு, கடை உள்ள பகுதி ஆட்கள் நிறைந்த பகுதி என்றால் சரிதான். பொதுவாக வண்டி நிறுத்தும் போது வண்டியின் சாவியை

பூட்டி தான் நிறுத்துவார்கள் என்றால் வாடிக்கையாளர் வரும் போது சாவியை எடுத்து வர  வேண்டும் என்பதால் கன்சல்டிங் என்பதால் வண்டியை சாவியுடன் தான் வைத்திருப்பார்கள். வழக்கிற்காக பொய்யாக சாவியுடன்  வைப்பார்கள் என்று பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல.

6. சம்பவம் நடைபெறவில்லை என்றாலும்  உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் வாதி உடனே புகார் கொடுத்திருப்பார் என்றாலும் இந்த வழக்கிற்கும எதிரிக்கும சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி மீது  உங்கள் காவல் நிலையத்தில் பழைய வழகது உள்ளதால் புள்ளி விவர கணக்கிற்காக அவசரகதியில்  ஆ வணங்களை அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரித்து எதிரி மீது பொய்யான வழக்கு போட்டுள்ளிர்கள் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் வாதியின் கடையில் இருந்த சிசிடிவி கேரமா பதிவுகளை வழக்கு கோப்பில் தாக்கல் செய்திருப்பிர்கள் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

## DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 599/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : செல்வக்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : | |
| கிராமம் | : | இனம் | : | |
| தாலூக்கா | : | வயது | : | |
| Mail ID | : | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.03.2026.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்ன படித்துள்ளிர்கள் என்றால் MA படித்துள்ளேன். கடையில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் உள்ளது சரியாக வேலை செய்யாது. கடையில் சிசிடிவி கேமரா வேலை செய்யாது என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக வண்டி மழை வெயில் படாமல் செட்டில் நிறுத்தி வைத்திருப்பிர்கள் என்றால் வண்டி பாதுகாப்பாக தான் இருக்கும். வழக்கு சொத்தான வண்டி அது போன்று தான் நிறுத்தியிருந்தது என்றால் அனைத்து வண்டிகளுடன் இந்த வண்டியும் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டிருந்தது.
2. உங்கள் புகாரிலும் முதல் விசாரணையிலும் எதிரி குறித்து குறிப்பிட்டு அடையாளம் குறித்து சொல்லவில்லை என்றால் அந்த நபர் ஏற்கனவே கடைக்கு வந்துள்ளதால் அவரை பற்றி கூறியுள்ளேன். குறிப்பிட்டு அடையாளம் பற்றி சொல்லவில்லை என்றால் தெரியும் என்று கூறியுள்ளேன். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. சம்பவ நடந்த போது உங்கள்

கடையில் நிறைய பேர் இருந்தார்கள் என்றால் சரிதான்.

3. யார் யார இருந்தார்கள் என்றும் எத்தனை பேர் இருந்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் வாடிக்கயைாளர்களை சொல்லவில்லை பணிபுரிந்த நபர்களை பற்றி சொல்லியிருந்தேன். வழக்கின் சாட்சிகள் அனைவரும உங்கள் கடையில் வேலை செய்பவர்கள் என்றால் ஜனார்த்தனன் வேலை செய்தவதாக சொல்லியுள்ளேன். ஜனார்த்தனன் மட்டும் வேலை செய்யும் நபர் என்றால் சரிதான். பொதுவாக வண்டி நிறுத்தும் போது சாவியை பூட்டி தான் நிறுத்துவார்கள் என்றால் கஷ்டமர் வந்து பார்ப்பதால் எப்போதும் சாவியுடன் தான் இருக்கும ஒவ்வொரு முறையும் சாவியை கொண்டு வர இயலாது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றாலும் வண்டியை பூட்டி விட்டு சாவியை உங்கள் வசம் வைத்திருப்பிர்கள் என்று பொய்யாக சொல்கிறிர்கள் என்றாலும் சரியல்ல. 40–50 வண்டியை நிறுத்தியிருப்பதால் சாவியுடன் நிறுத்தியிருப்பேன்.

4. வண்டி யார் பெயரில் உள்ளது என்றால் அப்போது தான் வண்டியை எடுத்தோம் யார் பெயருக்கு சேல்ஸ் செய்கிறோமோ அவர் பெயருக்கு பின்னர் மாற்றப்படும். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றாலும் வண்டி எடுத்தப்பின் ஆர்டிஓ சட்டப்படி பெயர் மாற்றம் செய்யப்படும் என்றாலும் நான் வண்டியை சேல்ஸ் செய்த பின்னிட்டு பெயர் மாற்றம் செய்யப்படும். வழக்கு சொத்தான வண்டி உங்கள் பெயரில் இல்லை என்றால் சரிதான். வண்டி புக் உங்கள் வசம் இல்லை என்றால் வண்டி புக், ஆர்சிபுக் வாடிக்கையாளர் கையொப்பம், டியூ பார்ம் என் வசம் உள்ளது சேல்ஸ் எடுக்கும் போது அனைத்து ஆவணங்களையும் வைத்திருப்போம். டியூ பார்ம் போலிசார் விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான், ஜெராக்ஸ் கொடுத்துள்ளேன். வண்டியை திரும்ப பெறும் மனுவில் கொடுத்துள்ளேன்.

5. கடையில் இருந்து காவல் நிலையம் எவ்வளவு துாரம் என்றால் சுமார் ¾ கிமீ இருக்கும். புகார் 6 நாட்கள் காலதாமதாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். முதல் விசாரணையில் தேடி பார்த்ததாக சொல்லியுள்ள நிலையில் , யார் யாரிடம் எங்கு எங்கு என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அவர் வீட்டில் அவர் அம்மாவிடம் கேட்ட போது அவர் வீட்டிற்கு வரவில்லை என்று சொன்னார்கள். மேற்கூறிய சங்கதியை புகாரில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நீங்கள் தான் ஜெனியூ ஆட்டோ கேர் நிறுவனத்தின் உரிமையாளர் என்பதை சொல்ல ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றாலும் போலிசார் விசாரணையிலும்

சொல்லவில்லை என்றால் ஆமாம். வண்டியின் பார்ம் 29,30 வழக்கில் போலிசாரிடம் தாக்கல் செய்யவில்லை என்றால் நகல் கொடுத்துள்ளேன். உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் உடனடியாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்திருபபிர்கள் என்றாலும், 6 நாடகள் காலதாமதாக புகார் கொடுத்துள்ளிர்கள் என்றாலும் எதிரி லோக்கல் என்பதால் விசாரித்து வாங்கி கொள்ளலாம் என விசாரித்து கொண்டிருந்தேன். எதிரி கிடைக்காததால் புகார் கொடுத்தேன். எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கும் இந்த எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் வண்டி அவரிடம் இருந்து தான் கைப்பற்றப்பட்டது. காவல் நிலையம் அடிக்கடி செல்விர்கள் என்றால் அதிகமாக செல்வதில்லை என்று சாட்சி சொல்லிவிட்டுபின்னிட்டு போவதில்லை எனறு சொல்கிறார். போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய்யாக வழக்கிற்காக பொய்யான சாட்சியம் சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 599/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நவின் பாபு | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.03.2026.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. என்ன வேலைசெய்து வருகிறிர்கள் என்றால் ஜெனியு ஆட்டோ கேரில் வேலை செய்து வருகிறேன். நீங்கள் அங்கு வேலை செய்வதற்கு ஆதரவாக ஆவணம் போலிசார் வசம் தாக்கல் செய்துள்ளிர்கள் என்றால் இல்லை. எத்தனை மணிக்கு புகார் கொடுத்திர்கள் என்றால் காலை 8.45 மணி இருக்கும். யார் யார் சென்றிர்கள் என்றால் நானும் ஓனரும் சென்றோம். புகாரில் உள்ள உங்களுக்கு தெரியாது ஏதாவது என்றால் ஓனர் சொல்ல சொல்ல நான் எழுதினேன். உங்களுக்கு தெரியாது என்றால் ஆமாம், அவர் சொல்ல சொல்ல எழுதினேன்.
2. நீங்கள் வேலை செய்யும் கடையில் சிசிடிவி கேமரா உள்ளதா என்றால் உள்ளது. அந்த சிசிடிவி கேமரா பதிவுகளை போலிசார் வசம் ஒப்படைத்திர்களா என்றால் எனக்கு தெரியாது, அது பற்றி ஓனருக்கு தான் தெரியும், அவர் மொபைலில் தான் உள்ளது. பொதுவாக வண்டி பொதுவா வண்டி எல்லாமே வந்து மழை வெயில்

இதெல்லாம் படாம ஒரு செட் மாதிரி போட்டு வைத்திருப்பிர்கள் என்றால் ஆமாம். வழக்கு சொத்தான இந்த வழக்கின் வண்டி அதே மாதிரி பாதுகாப்பாக வைக்கப்பட்டது என்றால் கடைக்கு முன்னால் நிறுத்தி வைத்திருந்தோம். பொதுவாக பைக் நிறுத்தினால் சாவியை பூட்டு போட்டு தான் சாவி வந்து நம்ம கஸ்டடியில் வைத்திருப்போம் என்றால் பைக்கை நிறுத்தி சாவியை நாங்கள் வைத்திருந்தோம். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல, பைக்கில் சாவியுடன் தான் வைத்திருந்தோம்.

3. நீங்கள் உங்களது போலிசார் விசாரணையில் உங்களுடைய உரிமையாளர் பெயர் சிவகுமார் அப்படின்னு சொல்லியிருந்தால் அது தவறு என்றால் நான் செல்வக்குமார் என்று சொன்னேன் அவர்கள் டைப் செய்யும் போது சிவக்குமார் என்று டைப் செய்து விட்டார்கள். இவ்வாறு சிவக்குமார் என்று சொல்லிவிட்டு தற்போது செல்வக்குமார் என்று சொன்னதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் உள்ள துாரம் எவ்வளவு என்றால் சுமார் 1 கிமீ இருக்கும்.
4. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நீங்கள் கடையில் தான் இருந்திர்கள் என்றால் ஆமாம். சுமார் 10 பேர் கடையில் வேலை செய்து வருவார்கள் என்றால் 6-7 பேர் வேலை செய்கிறார்கள். எதிரி பற்றி குறிப்பிட்டு விவரமாக நெட்டையா அல்லது குட்டையா, கலர் பற்றி போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம்.
5. புகார் 6 நாட்கள் காலதாமதாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எங்கெங்கெல்லாம் போய் தேடினிர்கள் என்றும் யார் யாரிடம் விசாரித்திர்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் உங்கள் கடையில் ஆட்கள் நிறைய பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 12 பேர் இருந்தார்கள். காவல் நிலையம் செல்விர்கள் என்றால் நான் போனதில்லை. புகார்வாதி உங்களுக்கு என்ன உறவு என்றால் எனது ஓனர். உங்கள் ஓனர் கொடுத்த பொய்யான புகாருக்கு போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றாலும் அது போன்று சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. கடையில் வேலை செய்யவில்லை என்றால் நான் செய்கிறேன். அது போன்று வேலை செய்திருந்தால் அதற்கான ஆவணம் தாக்கல் செய்திருப்பிர்கள் என்றால் நான் எடுத்து சென்றதை மட்டும் கொடுத்தேன். எதிரிக்கும்

இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.